www.Padasalai.Net www.TrbTnpsc.com

11 R

தேர்வு எண்:

# காலாண்டுத் தேர்வு - 2024

கால அளவு: 3.00 மணிநேரம் **தமிழ்** மதிப்பெண்கள்: 90

குறிப்பு: 1. விடைகள் தெளிவானதாவும் குறிப்பட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 14 x 1 = 14

பகுதி - I

1. பாயிரம் இல்லது ______ அன்றே.
அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க
அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம் இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்
3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ______
அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவைமூன்றும்
4. புல்லின் இதழ்கள்- நூலின் ஆசிரியர்
அ) பாப்லோ நெருடா ஆ) ஸ்டெஃபான் மல்லார்மே இ) ரவிவர்மா ஈ) வால்ட்விட்மன்
5. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
6. பகுபத உறுப்புகளுள் இடம் பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
அ) பகுதி, விகுதி ஆ) பகுதி,இடைநிலை, சாரியை
இ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம் ஈ) பகுதி, சந்தி, விகாரம்
7. ஒப்புரவு என்பதன் பொருள் ______
அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது
8. துன்பப்படுபவர்______
அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர் இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்
9. நிழல்போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?
அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு
10. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ______என்பதாகும்.
அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்
11. ஆனந்தரங்கருக்கு தொடர்பில்லாத குறிப்பு எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பின் தந்தை
12. "யானை டாக்டர்"- புதினத்தின் ஆசிரியர்______
அ) ஜெயமோகன் ஆ) பிரபஞ்சன் இ) சி.சு. செல்லப்பா ஈ) இந்திரன்
13. 'செங்கயல்'- இலக்கணக் குறிப்புத் தருக.
அ) எண்ணும்மை ஆ) பண்புத்தொகை இ) அடுக்குத்தொடர் ஈ) உரிச்செல் தொடர்
14. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்த___நினை
அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
இ) மறதியால் கெட்டவரை ஈ) சொல்லேர் உழவரை

பகுதி - II

பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடைதருக.** 3 x 2 = 6

15. இனம், மொழி குறித்த இரதுல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
17. காவடிச் சிந்து என்பது யாது?
18. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீன் எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்" - இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது ?

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்** 2 x 2 = 4

19. பேச்சு மொழி எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
20. தமிழ்நாட்டின் மாநிலமரம்- சிறு குறிப்பு வரைக
21. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.

பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 7 x 2 = 14

22. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை ? அவை யாவை?
23. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக. (அ) அலர்ந்து (ஆ) விடுத்தல்
24. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக. (அ) பொதுச்சிறப்பு ஆ) அரும்பொருள்
25. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
(அ) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.
26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. அ) உலை, உளை, உழை



Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக
அ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை தீமைகளை புரிந்து பேசுவர்.
ஆ) தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.
28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க கால்நடை (அல்லது) வைகை
29. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
30. விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக (கம்பு, மை, வளை, இதழ்)
(அ) எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும் ____
(ஆ) அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் ____
(இ) பூவின் உறுப்பும் நானே, புன்னகையின் பிறப்பிடமும் நானே
ஈ) கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம்____.

பகுதி - III

பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடைதருக.** 2 x 4 = 8

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது.
32. 'சலச வாவியில் செங்கயல் பாயும்'- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
33. புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறை வழி நின்று கூறுக.
34. மேகத்திடம் கூறுவது போலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக .** 2 x 4 = 8

35. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும்- குறிப்புவரைக.
36. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நம் கருத்தை எழுதுக.
37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக் காட்டுக.
38. என்னுயிர் தமிழ்மொழி என்பேன் ? என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.

பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3 x 4 = 12

39. அ) வேற்றுமை அணியை விளக்குக. (அல்லது)
ஆ) 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு'. - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக (மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக)

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்-புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதைமை யற்றிடும் காணீர். - பாரதியார்

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்பு படுத்தி எழுதுக.
(அ) சிறு துரும்பும் பல் குத்த உதவும்
(ஆ) வினை விதைத்தவன் வினை அறுப்பான் தினை விதைத்தவன் தினை அறுப்பான்
42. தமிழாக்கம் தருக.
(1) Knowledge rules the world
(2) The Pen is mightier than the sword
(3) Education is the most Powerful weapon, which you can use to change the world.
(4) Culture does not make people, People makes culture
43. 'வா' என்ற வேர்ச்சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றி தொடரமைத்து எழுதுக.

பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3 x 6 = 18

44. (அ) அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்'- இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.
(அல்லது)
(ஆ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
45. (அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும், எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க
(அல்லது)
(ஆ) பௌத்தக்கல்வி, சமணக்கல்வி மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.
46. (அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை? (அல்லது)
(ஆ) 'யானை டாக்டர்' வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு குறித்து நீவிர் அறிந்தவற்றை எழுதுக.

பகுதி - V

**அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

47. (அ) 'உண்டால் அம்ம'— எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.
(ஆ) 'பெரிது'.... என முடியும் குறள்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com